**Starting time 12.45 P.M.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 67/2012**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 18.03.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: வழக்கு சொத்தில் ஒரு கிணறு இருக்கிறது என்றால், ஆமாம். அதில் மின் மோட்டார், பம்ப் செட், மின் இணைப்பு இருக்கிறது என்றால், ஆமாம். அதன் மின் இணைப்பு எண் என்ன என்றால், 89. எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை படி கிணறு, மோட்டார் பம்பப் செட், மின் இணைப்பு ஆகியவற்றில் தலா பாதி பங்கு என்றால், ஆமாம். அந்த கிணறு சுமார் 50 அடி ஆழம் இருக்கும் என்றால், இல்லை, 80 அடி ஆழம்.

2. அந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு நானும் பிரதிவாதியும் அந்த மின் மோட்டார் பம்ப் செட் மூலம் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து நிலங்களுக்கு பாய்ச்சவில்லை என்றால், ஆமாம். ஓடைக்கும் கிழக்கில் இருக்கும் நிலத்தில் தான் கிணறு இருக்கிறது என்றாலும், ஓடைக்கு மேற்கில் உள்ள நிலத்தில் கிணறு இல்லை என்றாலும், ஆமாம். ஓடைக்கு இருபுறமும் உள்ள நிலங்களில் நாங்கள் இருவரும் தனிப்பட்ட முறையிலோ, கூட்டாகவோ போர்வெல் மோட்டார் பம்ப் செட் போட்டுக்கொள்ளவில்லை என்றால், ஆமாம்.

மழை பெய்யும் காலங்களில் 2 , 3 மாதங்களுக்கு கிணற்றில் இருக்கும் என்றாலும் மற்ற காலங்களில் நீர் வறண்டு விடும் என்றால், சரியல்ல, வருடம் முழுவதும் இருக்கும்.

3. அக்கம் பக்கத்து தோட்டத்துக்காரர்கள் அனைவரும் கிணற்றில் தண்ணீர் இல்லாததால் போர்வெல் போட்டுக் கொண்டார்கள் என்றால், ஆமாம். கிணற்றில் உள்ள பம்ப் செட் ஓடுகிறதா என்றால், கிணற்றிற்கு முன்பாகவே பிரதிவாதி வேலி போட்டுவிட்டார், அதனால் கிணறு பக்கம் போக முடியவில்லை. மோட்டார் ஓட்டக்கூடிய அளவில் மின் ஒயர் இணைப்பு இருக்கிறதா என்றால், இருக்கிறது.

4. 2012-லிருந்து நான் கிணற்று பக்கமே போகவில்லை மோட்டாரை ஓட்டி பார்க்க முயற்சிக்கவில்லை. மின் மோட்டார் ஒயர் என்ன ஆனது என்றால், நான் பார்க்கவில்லை, ஆனால் இருக்கிறது. 03.06.2012-தேதியன்று இந்த வழக்கு தாக்கல் செய்து இரண்டு ஒரு மாத்திலேலே பிரதிவாதிகள் எனது பெயரில் மின் ஒயரை வெட்டி எடுத்துச் சென்றதாக ஏத்தாப்பூர் காவல் நிலையட்டததில் புகார் அளித்தாரா என்றால், இல்லை.

5. 03.06.2012 தேதியன்று CSR மனு ரசீதியில் 235/12-ல் பிரதிவாதி நான் பொதுகிணற்றிலிருந்து மின் ஒயர்களை அறுத்து எடுத்துச் சென்றதாக புகார் அளித்து என்னையும் பிரதிவாதியையும் அழைத்து விசாரித்தார்கள் என்றால், இல்லை. 03.06.2012 தேதியன்று பிரதிவாதி அளித்த புகாரின் பேரில் என்னையும் பிரதிவாதியையும் ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள் என்றால், நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்று கூறியதால் வழக்கிலேயே பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டார்கள் என்றாலும், சரியல்ல.

6. நான் தான் மின் ஒயர்களை அறுத்து போட்டுவிட்டு இருவரும் பயிர் செய்யக்கூடாது என கூறிவிட்டு வந்துவிட்டேன் என்றாலும், தற்போது பிரதிவாதிதான் கிணற்றை பயன்படுத்து தடுக்கிறார் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் என் தம்பி என்னை பயிர் செய்ய விடவில்லை என்றும், மோட்டார் பம்பப் செட்டை பயன்படுத்த விடமாட்டேன் என்கிறார், கிணற்றை சுற்றி வேலி

போட்டுவிட்டார் என்றோ எங்கேனும் சொல்லியுள்ளேனா என்றால், ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.

7. எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால், ஞாபகம் இல்லை. சுமார் 5 வருடங்களுக்கு மேல் இருக்கும். நான் கொடுத்த புகாருக்கு காவல் துறையினர் ரசீது கொடுத்தார்களா என்றால், கொடுத்தார்கள். நான் காவல் துறையினரிடம் கொடுத்த புகார் நகலையோ, அந்த புகார் ஏற்றுக் கொண்டதற்கான ரசீதையோ நதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு புகாரின் நகலையோ, ரசீதின் நகலையோ தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக தற்போது தான் தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல.

8. நான்தான் மின் ஒயரை அறுத்து போட்டுவிட்டு விவசாயம் செய்வதை தடுத்துவிட்டேன் என்றால், சரியல்ல, அவர்தான் வேலி போட்டுவிட்டார். பொது கிணறு மற்றும் பொது மோட்டார் என்பதால் கூட்டு உரிமையாளர்கள் என்பதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால், சரியல்ல.( வாதி தரப்பில் சாட்டுரைகளில் சொல்லப்படாத சங்கதிகள் குறித்து குறுக்கு விசாரணை செய்வதாக ஆட்சேபனை செய்யப்பட்டது).

9. கூட்டு உரிமையாளருகளு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்பதால் இவ்வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தடத்திற்காக மட்டும்தான் வழக்கு போட்டுள்ளேன் வேறு எதற்காகவும் போடவில்லை. என்னுடைய வழக்குரையில் சொத்து விவரத்தில் முதலினமாக நிலம், கிணறு, மின்மோட்டார் ஆகியவைகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஆமாம்.

10. அண்ணா நகர் என்பது எனது தோட்டத்திற்கு தெற்கில் உள்ளது என்றாலும், அது பனைமடல் கிராமத்தின் ஒரு பகுதி என்றாலும், ஆமாம். அண்ணா நகர் பகுதியிலிருந்து கிழக்கு நோக்கி சென்று பின்பு வடக்கு நோக்கி சென்று மலைக்கும் மண்ணூர் பகுதிக்கு செல்லும் ஒரு தார் ரோடு பஞ்சாயத்து ரோடு செல்கிறது என்றால், அது

ரெட்டிக்குட்டைக்கு செல்லும் பாதை என்று கூறுவார்கள் என்றால், ஆமாம். அந்த பாதைக்கு ஒட்டினாற்போல் எனக்கு ஒருநிலமும், பிரதிவாதிக்கு ஒரு நிலமும் இருக்கிறது என்றால், ஆமாம். அதனுடைய புல எண் 274 என்றால், ஆமாம்.

11. அந்த நிலத்தின் ஒரு பகுதிக்குதான் வழக்கு போட்டுள்ளேன் என்றால், ஆமாம், அந்த நிலத்திற்கும் மற்ற நிலத்திற்கும் தான் போட்டுள்ளேன். புல எண். 274/1-ல் 0.86 செண்ட் நிலமும் புல எண். 274/5-ல் பொதுவில் ஏக்.1.62 ஆக மொத்தம் 2.49 செண்ட் வழக்கு போட்டுள்ளேன் என்றால், ஆமாம். புல எண். 274/5 ற்கு ஒட்டினாற்போல் அண்ணா நகரிலிருந்து ரெட்டிக்குட்டைக்கு செல்லும் தார் சாலைக்கு ஒட்டினாற்போல் இருவருக்கும் நிலம் அமைந்துள்ளது என்றால், அந்த தடத்தின் வழியாக எங்களால் நிலத்திற்கு செல்ல முடியாது.

12. என்ன காரணத்திற்காக செல்ல முடியாது என்றால், அண்ணா நகருக்கு செல்லும் தார் சாலையிலிருந்து அவரவர் கிழக்கு பகுதியில் உள்ள அவரவர் நிலங்களுக்கு சென்று திரும்ப வரலாம் என்றால், வரமுடியாது. அதற்கு என்ன காரணம் என்றால், முன்புறத்திலேயே பிரதிவாதியின் பாகம் இருப்பதால் என்னால் செல்ல முடியாது. நான் வழக்கில் சொல்லியுள்ள கிழக்கில் இருக்கும் நிலத்திற்கு பாதையே இல்லை ஓடைதான் இருக்கிறது என்றாலும், சரியல்ல, ஆளுக்கு 6 செண்ட் நிலம் அளந்து போட்டு பாதை உள்ளது.

13. எப்போது அளந்தோம் என்றால், பாகம் பிரிக்கும் போதே அளந்தோம். பாகப்பிரிவினை பத்திரத்தில் நாங்கள் தலா 6 செண்ட் நிலத்தை விட்டது குறித்து உள்ளதா என்றால், இல்லை. அந்த ஓடை முழுவதுமே 12 வருடங்களாக முட்புதர் தான் இருக்கிறது என்றால், பிரதிவாதி முட்களை போட்டுவிட்டு தடத்தை போட்டுவிட்டார். அவர் மூடிவிட்டதால் முட்புதராக உள்ளது. ஓடை முழுவதுமே முட்புதராகத்தான் இருக்கிறதா என்றால் இல்லை. ஓடையை நான் சீர்திருத்தம் செய்தேனா என்றால், இல்லை அப்படியேத்தான் இருக்கிறது.

14. பஞ்சாயத்தில் 100 நாள் வேலை திட்டடத்தில் தான் முட்புதரை சீர்திருத்தம் செய்தார்கள் என்றால், ஆமாம். எவ்வளவு வருடங்களுக்கு முன்பு சீர்திருத்தம் செய்தார்கள் என்றால், 3 வருடங்களுக்கு முன்பு இருக்கும். மீண்டும் முட்புதர் வளர்ந்துவிட்டது என்றால் இல்லை நன்றாகத்தான் இருக்கிறது. நீதிமன்ற ஆணையரின் பெயர் என்ன என்றால், அவர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்து படித்துள்ளேனா என்றால், பார்க்கவில்லை, அதனால் படிக்கவில்லை.

15. முதல் முறை ஆணையரை அழைத்து சென்ற போது ஒரு வழியாகவும், மறுமுறை அழைத்து சென்றபோது வேறு ஒரு வழியாகவும் அழைத்து சென்றேன் என்றால், நான் அழைத்து செல்லவில்லை, பிரதிவாதிதான் அழைத்து சென்றால். இரண்டு முறையுமே நான் தான் நீதிமன்ற ஆணையரை அழைத்துச் சென்றேன் என்றாலும், நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் இருமுறையும் வெவ்வேறு பாதையில் அழைத்து சென்றதாக கூறியுள்ளார் என்றால், நான் அழைத்து சென்றபோது என்னுடைய நிலத்தின் வழியாக அழைத்து சென்றேன். பிரதிவாதி அழைத்து சென்றபோது அவருடைய நிலத்தின் வழியாக அழைத்து சென்றார்.

16. ஓடை முழுவதும் முட்புதராக இருந்ததால் அந்த வழியாக ஆணையரை அழைத்து சென்றால் உண்மை தெரிந்து விடும் என்பதால் வேறு வழியாக அழைத்து சென்றேன் என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மூலம் நிலத்தை அளந்து பார்த்தேனா என்றால், இல்லை. கிராம நிர்வாக அதிகாரி, சர்வேயர் மூலம் அளந்தோம். மேற்படி சங்கதியை எனது வழக்கில் செல்லியுள்ளேனா என்றால், இல்லை. அவர்கள் கொடுத்த சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால், கொடுக்கவில்லை.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 01.27 P.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.